දිවයිනේ ජාතික හා පළාත් පාසල්වල පවතින ඉංග්‍රීසි විෂය ගුරු පුරප්පාඩු සඳහා ඩිප්ලෝමාධාරීන් ශ්‍රී ලංකා ගුරු සේවයේ 3-I (ආ) ශ්‍රේණියට බඳවා ගැනීම 2021 (2024)

## Recruitment of Diploma Holders for Teacher Vacancies of National Schools and provincial Schools – 2021(2024)

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-1(இ) இற்கு ஆட்சேர்த்தல் - 2021(2024)

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தகவல் தொழில்நுட்பம், மனைப் பொருளியல் அழகியல் பாடங்களுக்கு (சித்திரம், சங்கீதம், நடனம்) இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-I (இ) இற்கு டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்பதற்குரியதாக 2021.03.15ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 2021.12.12ம் திகதியன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சை மற்றும் 2024 மே மாதம் 10, 11, 13 மற்றும் 20 மற்றும் ஒக்டோபர் மாதம் 30 மற்றும் டிசம்பர் 04 ம் திகதிகளில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் முன்னுரிமைக்கமைய தேசிய பாடசாலைகளில் **ஆங்கிலப் பாடத்திற்கு** 2ம் கட்டத்தின் கீழ் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காமa நடவடிக்கைகள் ஜூலை 29 மற்றும் 31ம் திகதிகளில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. அதற்கமைய தேசிய பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கமைய தங்களால் பாடசாலைகளுக்குரிய விருப்பினைத் தெரிவிக்க வேண்டும். அதன் படி தங்களது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் முன்னுரிமை வரிசைக்கமைய தங்களுக்கு பாடசாலையொன்று வழங்கப்படும். அதற்கமைய பாடசாலைகளுக்கு விருப்புத் தெரிவிக்கும் செயற்பாடு மற்றும் தங்களுக்குரிய நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக **2025.07.29 மற்றும் 2025.07.31 ம் திகதிகளில்** மு.ப **9.30** மணிக்கு இசுருபாய கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்கு சமூகமளிக்குமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தகுதி பெற்றவர்களது பெயர் பட்டியல், அழைப்புக் கடிதம் ஆகியவற்றை கீழ்வரும் இணைப்பினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

அதற்கமைய அனைத்து தகுதிபெற்றவர்களும் குறித்த அழைப்புக் கடிதத்தின் ஆலோசனைக்கமைய தயாராகி தமக்குரிய தினத்தில் உரிய நேரத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும்.

CS CamScanner

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
"Isurupaya", Battaramulla, Sri Lanka
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

எனது இல. / My Ref. ED/2/29/25/03/01 ஆங்கிலம் (பிரிவு 1) | உமது இல. / Your Ref. | திகதி / Date 2025.07. 23

நியமனம் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெற்றுள்ள அனைவருக்கும்.

**நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-1(இ) இற்கு ஆட்சேர்த்தல் - 2021(2024)**

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தகவல் தொழில்நுட்பம், மனைப் பொருளியல் அழகியல் பாடங்களுக்கு (சித்திரம், சங்கீதம், நடனம்) இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-I (இ) இற்கு டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்பதற்குரியதாக 2021.03.15ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 2021.12.12ம் திகதியன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சை மற்றும் 2024 மே மாதம் 10, 11, 13 மற்றும் 20 மற்றும் ஒக்டோபர் மாதம் 30 மற்றும் டிசம்பர் 04 ம் திகதிகளில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமைக்கமைய தேசிய பாடசாலைகளில் **ஆங்கிலப் பாடத்திற்கு** 2ம் கட்டத்தின் கீழ் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக தாங்கள் தகுதி பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. அதற்கமைய தேசிய பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கமைய தங்களால் பாடசாலைகளுக்குரிய விருப்பினைத் தெரிவிக்க வேண்டும். அதன் படி தங்களது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் முன்னுரிமை வரிசைக்கமைய தங்களுக்கு பாடசாலையொன்று வழங்கப்படும். அதற்கமைய பாடசாலைகளுக்கு விருப்புத் தெரிவிக்கும் செயற்பாடு மற்றும் தங்களுக்குரிய நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அடிப்படைச் செயற்பாடுகள் **2025.07.29 / 31 ஆகிய திகதிகளில்** நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் போது தங்களுக்குரிய தினத்தன்று மு.ப **9.30** மணிக்கு இசுருபாய கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்கு சமூகமளிக்குமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அன்றைய தினமே நியமனம் வழங்குவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதால், அதற்காக ஆண் நியமனதாரர்கள் கறுப்பு நிற காற்சட்டை, வெள்ளை மேற்சட்டை அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பெண் நியமனதாரர்கள் வெள்ளை அல்லது கிறீம் நிறத்திலான சாரி அல்லது ஒசரி அணிந்து சமூகமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு - நம்பிக்கைக்குரிய,

ஏ.ஜே.எஸ்.எஸ் எதிரிசூரிய
மேலதிக செயலாளர் (தாபனம்)
செயலாளருக்காக

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk